Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 9-11-1946 ஐப்பசி மீ 24உ { மலர் 5

## நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A.,B.L.)

(5-10-46 குடி அரசின் தொடர்ச்சி)

எந்த நாட்டிலும், அரசுபுரியும் ஜாதியாரே எல்லா செல்வாக்கையும், சம்பத்தையும் அடைந்து வருகின்றார்களேயொழிய, சாமான்ய மக்களுக்கு எந்தப்பாக்கியமுமில்லை. ஏனெனில், சாமான்ய மக்களுக்கு, சிறிதும் எந்த அரசியலிலும் நேரான ஆதிக்கமில்லாமையாலென அறிக. ஆதலின் எந்தக் கட்சியினராயினும், அவர்கள் காங்ரஸ் கட்சியினராயினும், திராவிடக் கழகத்தாராயினும் அல்லது மிதவாதிகளாயினும், அல்லது சமயவாதிகளாயினும், அல்லது வேறுஎந்தக் கட்சியினராயினும் அவரவர்கள் கோரிக்கையும் உத்தேசங்களும் (Aims and Ideals, நிறைவேற வேண்டுமானால், அரசியல் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும். அரசியலைக் கைப்பற்றினாலொழிய எந்தக் கட்சியும் எவ்வித நன்மையும் பெறமுடியாதென அறிக. எனவே, சுயமரியாதைக்காரராயினும் சரி, அல்லது சமதர்மிகளாயினும் சரி, அவரவர் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமாயின், அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கம் (Majority Rule) பெற வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

### அரசியல் ஆதிக்கம் அவசியம்

இன்று, பிற்போக்குக் கட்சிகள் உலகமெங்கும் நிறைந்திருப்பதற்கு என்ன காரணமெனில், இந்தக்கட்சிகள் அரசியலில் பெரும்பான்மை ஆதிக்கத்தை (Majority Rule) பெற்றிருப்பதாலென அறியவேண்டும். இன்று, முதலாளி கட்சிகள் உலக சம்பத்துகளைப் பெற்று வாழ்வதும் அரசியல் ஆதிக்கத்தாலென அறிதல் வேண்டும். பஞ்சமர்களும், பாமர மக்களும் உலகசம்பத்தில் சம செல்வாக்கைப்பெற வேண்டுமானால், இவர்களும் அரசியல் ஆதிக்கத்தைப் பெற வேண்டும். மகாத்மாக்கள் பட்டினி இடப்பதாலும், இல்லாதார் கோவிலில் நுழைவதாலும், பாமரமக்களை அரிஜன் என்று அழைப்பதாலும், அவர்கள் எவ்வித செல்வாக்கும் செல்வமும்பெற முடியாது. இவ்வழிகளெல்லாம் பாசாங்கும் பகல் வேஷமுமென அறிக.

### ஜாதி சமையம் ஒழிக்கும் வழி

வெறும் பிரச்சாரத்தாலும், மகாநாடுகளாலும், பாமர மக்கள் சுகவாழ்வைப் பெறமுடியாதெனவும் அறிக. ஜாதியை ஒழிக்கவேண்டுமாயின், அரசியல் மார்க்க வழியாகத்தான் ஒழிக்க முடியும். அரசியல் திட்டமின்றி, ஜாதி நாட்டைவிட்டு அகலாது. ஜாதியைவிட்டவர்கள் சில அனுகூலங்களைப் பெற கடந்த 200 வருஷங்களாகப் பாடுபட்டதும், ஆயிரக்கணக்கான பிரசங்கங்கள் செய்ததும், இக்காலத்தில் ஜாதி சீர்திருத்தக்காரர்கள் முயற்சி செய்வதும்பயனற்றுப்போயின ஒன்றும் கைகூடவில்லை. இந்திய சீர்திருத்தக்காரர்கள், தாங்கள்செய்துவந்த பிரச்சாரங்களோடு அரசியல்உலகை கைப்பற்றிருப்பார்களேயாமாயின், அவர்கள்கோரிவந்த சீர்திருத்த எண்ணங்கள் யாவும், கைக்கூடி வந்திருக்கும். இன்று சாரதா சட்டமொன்றைச் செய்யப்பட்ட நாட்டை நோக்கினால், சீர்திருத்தக்காரர்களுக்குப் போதுமான அரசியல் ஆதிக்கம் இல்லை என்பது வெளியாகிறது.

மதங்களை ஒழிக்க வேண்டுமாயினும் அரசியல் மூலமாகத்தான் ஒழிக்கமுடியும். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்து மதஸ்தாபன சட்டமும் அரசியல் ஆதிக்கம்பெற்ற, ஜஸ்டிஸ் கட்சியால், நிறைவேற்

யது. மதத்தை நிலைநிறுத்துவதற்காயினும், அல்லது ஒழிக்கவாயினும், எதையும் அரசியல் துறை மூலமாகத்தான் செய்ய முடியும். எந்த நன்மையோ வேண்டுமானாலும் அல்லது எந்த நன்மையைச் செய்ய வேண்டுமாயினும் அரசியல் துறையொன்றின் மூலமாகத் தான் செய்ய முடியும். அரசியல் ஆதிக்கத்தால் (Political power), உலகை இரட்சிக்கவும் கூடும்; அல்லது அழிக்கவும் கூடும். ஆனால் சமதர்மிகள் மாத்திரம்தான் இனி உலகை இரட்சிக்கத் தகுந்தவர்கள். அவர்கள் திட்டமொன்றே உலகப் பசிப் பிணியைப் போக்கவல்லது. ஆதலின் அவர்கள் அரசியலைக் கைப்பற்றல், அத்யாவசியமென்பது வெளிப்படை. சமதர்மிகள், அரசியலைக் கைப்பற்றும்வரை மதங்களுக்கும் அழிவில்லை, ஜாதிக்கும் அழிவில்லை, பசி பட்டினிக்கும் குறைவில்லை. அந்நாள்வரை கலப்பு மணங்களும், கலப்பு உண்ணுதலும் சொல்லளவிலேயே நிற்கும்.

### ஜாதிமத பாதுகாப்பால் வருங்கேடு

முதலாளி அரசுகள் யாவும், மதங்களையும் ஜாதி சமய ஆசாரங்களையும், பாதுகாக்கும் தன்மையிலேயே இருந்து வருகின்றன. மூடப்பழக்க வொழுக்கங்களை அனுசரித்தே வருகின்றன; அவனவன் இஷ்டப்படி, மூடநம்பிக்கையில் இருந்து வரலாம் என்று சட்டதிட்டங்களும் செய்துள. இத்யாதி சட்டதிட்டங்களையும், மனப்பான்மைகளையும், அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒழித்தாலொழிய, மக்கள் வாழ்க்கை பரிசுத்தப் படப்போவதில்லை. இதற்காகவே, சமதர்மிகள் அரசியல் துறையில் இறங்கவேண்டுவது அவசியமாகும்.

Freedom of religious worship—அதாவது அவனவன் இஷ்டப்படி தனது தெய்வத்தை வணங்கலாமென்பதை அறவே ஒழிக்க, உலகில் சமதர்மிகள் ஒருவரே கடமைப்பட்டுள்ளனர். ஏனெனில் இது, முதலில் சுதந்திரமே ஆகாது. ஒருவன் மடத்தனத்தில் தான் இருப்பேன் என்பது கொடுமையிலும் கொடுமையாகும். இரண்டாவது, இந்த மனப்பான்மைகள்தான் மதச்சண்டைகளையும், சமயப் போர்களையும் விளைவித்து, மக்களை வருத்தி வருகின்றன. மூடப்பழக்க வொழுக்கங்களும் இவைகளினாலேயே நிலைத்து வருகின்றன. இந்தப் போலி சுதந்திரத்தைக் கொண்டு கொடுங்கோல் அரசுகள் நீடித்து வருகின்றன. பெரும்பான்மை மக்களுக்குப் பகுத்தறிவு தோன்றாமலிருக்கச் செய்து வருவதும் இந்தப் போலி சுதந்திரமே. இந்தப் பாழும் சுதந்திரம் பஞ்சமாபாதகத்தைவிட பெரும் பாதகமென்றே எண்ணவேண்டும். எப்படி எனில், இந்தச் சுதந்திரத்தின் போரால் அரசுகள் செய்யாத கொடுமை இல்லை. ஆயிரம் வருஷங்களாகக் கிருஸ்து உலகமும், மகமதிய உலகமும், கொடும்போர் புரிந்து வந்தது இந்தப் போலி மத சுதந்திரத்தின் போரால் என அறிக. இன்றைக்கும் நமது நாடு முழுமையும், இந்துக்களும் மகமதியர்களும் தலையை உடைத்துக்கொள்வதும், இந்தக் கொடும் சுதந்திரத்தினாலெனவும் அறிக. இவ்விதக் கொடுமைகள் இந்தச் சுதந்திரத்தின் போரால் உலகில் நிகழ்வதால், மேல்நாட்டில் தொழிலாளர் அரசு வொன்றே இந்தக் கொடிய சுதந்திரம் அபினிக்கு ஒப்பாகுமென்ற உண்மையை

(தொடர்ச்சி 8-பக்கம்)


## “நாமக்கல் கவிஞர் நாவன்மை...!”

ஓர் அரிய ஆராய்ச்சி உரைநடை நூல்

ஆக்கியோன்:-

திருவத்திபுரம், மாவண்ணா தேவராசன்.

"தேச பக்தர்களே, நமது தமிழ்நாட்டில் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற மனஸ்தாபம் நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகின்றது. அது பாமர மக்களுக்கு ஒரு தப்பான வழியைக் காட்டி, பண்டிதர்களையும் கலக்கி, பொதுஜன சேவையில் ஈடுபட்டிருக்கிற பிராமணர்களையும்,—பிராமணரல்லாதாரையும் மிகவும் வருத்தப்படுத்தி வருகின்றது........."

நாம் சொல்வது ஆக இருக்குமா இது? நம் தோழர் நாமக்கல் வெ. இராமலிங்கம் தான் நவில்கிறார். தக்க ஆதாரங்களுடன், தோழர் மாவண்ணா இந்நூலில் நாமக்கல்லாரை மறுக்கிறார். நம் இயக்கத் தோழர்கள் கட்டாயம் படிக்கவேண்டிய புத்தகம்.

தனிப்பிரதி வேண்டுவோர் ரூ. 1-0-0 மணியார்டர் செய்க.
10 புத்தகங்களுக்குமேல் 20% கழிவு. தபால் தனி.

குறிப்பு:- இந்நூல் ஆசிரியர் எழுதிய
“கறுப்புச் சட்டை வீரர்கள் வழிநடைப் பாடல்கள்”
அச்சாகிக்கொண்டிருக்கிறது. எதிர்பாருங்கள்!

பிறவிவரங்கட்கு:-
ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்,
திருவத்திபுரம், (வ. ஆ.)

# பார்ப்பான் பணக்காரனானால்?

இந்த நாட்டில் பார்ப்பனர் மீது பாமரமக்களுக்கு வெறுப்பு உண்டாகும்படி செய்துவரும் (என்னால் தோற்றுவிக்கப்பட்ட) சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் பிரச்சாரத்தால் பார்ப்பனர்கள் தங்களுக்கு உரிய வைதிக சம்மந்தமான ஏழ்மை வாழ்க்கையை விட்டுவிட்டு, பாங்கி, வியாபாரம், இயந்திரமுதலாளி முதலிய தொழில்களில் ஈடுபட்டு ஏராளமான பணம் சம்பாதித்து அவர்களில் அநேகர் செல்வவான்களாகவும், இலட்சாதிபதிகளாகவும் ஆகிவிட்டார்கள், இதுதான் துவேஷப் பிரச்சாரத்தால் ஏற்பட்ட பயன் என்று பார்ப்பனர்கள்மீது வெறுப்புக்கொண்ட பலர் என்னைக் குற்றம் சொல்லுகிறார்கள்.

இது உண்மையானால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியேயாகும்.

எனக்கு, எனது சுயமரியாதை, திராவிடகழக பிரசாரத்தின் கருத்து ஒரு பார்ப்பான்கூட "மேல் ஜாதி"யான் என்பதாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தானே தவிர பார்ப்பான் பணக்காரனாகக்கூடாது, அவன் நல்வாழ்வு வாழக்கூடாது, அவன் ஏழையாகவே இருக்கவேண்டும் என்பது அல்ல. ஒவ்வொரு பார்ப்பானும் ராஜா சர் அண்ணாமலை செட்டியார், பொப்பிலி ராஜா, சர் ஷண்முகம் செட்டியார், சர். ராமசாமி முதலியார் போன்றவர்களாக, கோடீஸ்வரனாகவும், இலட்சாதிபதியாகவும் ஆகிவிட்டாலும் சரியே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தப் பார்ப்பானும், மடாதிபதிகள் உள்பட எவரும் சிறிதுகூட நமக்கு மேல்ஜாதியினன் என்பதாக இருக்கக்கூடாது என்பதுதான். பணக்காரத்தன்மை ஒரு சமுகத்துக்குக் கேடானதல்ல, அந்தமுறை தொல்லையானது, சாந்தியற்றது என்று சொல்லலாம். ஆனாலும் அது பணக்காரனுக்கும் தொல்லையைக் கொடுக்கக்கூடியதும், மனக்குறை உடையதும் இயற்கையில் மாறக்கூடியதும் எப்பொழுது வேண்டுமானாலும் மாற்றக்கூடியதுமாகும்.

ஆனால் இந்த மேல்ஜாதித் தன்மை என்பது இந்த நாட்டுக்கு, பெரும்பாலான மனித சமுதாயத்துக்கு மிக மிகக் கேடானதும், மகா குற்றமுடையதுமாகும். அது முன்னேற்றத்தையும், மனிதத் தன்மையையும் சமஉரிமையையும் தடுப்பதுமாகும். ஒரு பெரிய மோசடியும், கிரிமினலுமாகும். ஆதலால் என்ன விலை கொடுத்தாவது மேல் ஜாதித் தன்மையை ஒழித்தாக வேண்டும் என்பது எனது பதிலாகும்.

ஈ. வெ. ரா.

## 26-10-46ல் தன்மானத்தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு

நாகை வெளிவை மணி பகுத்தறிவுக் கழகத்தார் வாசித்தளித்த நல்வாழ்த்துரையின் ஒரு பகுதி.

எங்களன்னை "நாகம்மையார்" மறைவும்,
மாயவரம் "நடராசன்" பிரிவும்,
நாகை வாழ் 'மணி' ஓசை முடிவும்,
நமது செல்வந்தன்னைக்கடல் கொண்டு
போனதுவும், நமது விழிகளுக்கும்,
செவிகளுக்கும் விருந்தளித்து,
நமது மனவேதனைக்கு மருந்தளித்து
தேற்றிவந்த "நடிக மணி
இருவரையும் சிறைக்கோட்டம்
விழுங்கியதும், இந்த வாள்
புண்கள் வடுவாய்ப் போகு முன்னம்
எங்கள் இளந்தலைவன்
அழகு மன்னன் "அர்ச்சுனனின்"
ஆவி பிரிந்ததை எண்ணி இளைஞர்
உள்ளம் எரிகின்ற இந்நாளில்
தாங்காத துன்பந்தன்னைச்
சுமந்து, தூங்காது தொண்டு செய்யும்
"தொண்டு கிழவரே" நீரே வாழ்க! வாழ்க!!


## மணமகள் தேவை

சொந்த வேளாளர் வகுப்பைச் சேர்ந்த சுமார் 25-வயதுடைய ஆசிரியப்பயிற்சிபெற்ற (ஹையர் கிரேட்) வாலிபனுக்கு ஷை வகுப்பைச் சார்ந்த ஆசிரியப் பயிற்சிபெற்ற மணமகள் தேவை விருப்பமுள்ளவர்கள் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதலாம்.

சர்வோத்தமன்,
ஆசிரியர்,
கண்டர் உயர்நிலைப்பள்ளி.
மேலூர் (சேலம்)

குடி அரசு

1946-ஆம் நவம்பர் 9உ

# இப்போது தேர்தல் இல்லை ஏன்?

காங்கரஸ் சர்க்கார், ஜில்லா போர்டு, நகரசபை தேர்தல்களை டிசம்பரில் நடத்த எல்லா ஏற்பாடுகளும் செய்து, நாமினேஷன்கள் போடவும், தேர்தல்கள் (எலக்ஷன்கள்) நடத்தவும் தேதிகள் எல்லாம் குறிப்பிட்டு விளம்பரம் முதலியவைகளும் செய்து, மாகாணமக்கள் யாவருக்கும் தெரிவித்துவிட்டதோடு மாத்திரமல்லாமல் புதுத் தேர்தலுக்காக என்றே ஜில்லா போர்டுகளை எல்லாம் கலைத்து ஸ்பெஷல் ஆபீசர்களையும் ஏற்படுத்தி அவர்கள்வசம் ஜில்லா போர்டுகளை ஒப்படைத்து விட்டது.

இந்தத் தேர்தல்களில் போட்டிப்போட என்றே காங்கரஸ் கட்சியார் மாகாணம் முழுவதற்கும் அட்டாக் கமிட்டி ஏற்படுத்தி ஆங்காங்குள்ள அட்டாக் கமிட்டிகள் தேர்தலுக்குக் காங்கரஸ் சார்பாக ஆள்களை நிறுத்த காங்கரஸ்காரர்களிடம் விண்ணப்பம் கோரி அந்த விண்ணப்பங்களின்மேல் கமிட்டி கூடி அங்கத்தினர்களைப் பொறுக்கி அதை மேலிடத்துக்கு அனுப்பி அவர்களுடைய ஆமோதிப்பையும் பெற்றுவிட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் திடீரென்று காங்கரஸ் சர்க்கார் 'ஸ்தலஸ்தாபனத் தேர்தல்கள் காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுவிட்டன' என்று உத்திரவிட்டிருக்கிறது. சில பத்திரிக்கைகள் ஒரு வருஷத்திற்கு ஒத்திவைத்திருப்பதாகக் கூறுகின்றன. நாட்டில் மக்களுக்குள் ஒருவருக்கொருவர் மனக்கசப்பு நிறைந்திருப்பதால் தேர்தல் பிரச்சாரம் செய்யப்படுவதன்மூலம் கலவரங்கள் ஏற்பட்டுவிடுமோ என்று பயப்படுவதாகவும், ஆகலால் தேர்தல்களை நிறுத்திவைப்பதாகவும் தேர்தலை ஒத்திவைத்ததற்குச் சர்க்காரார் காரணம் கூறுகின்றனர். இதுதான் முக்கிய காரணமென்று எல்லாப் பத்திரிக்கைகளிலும் செய்தி வெளியாகி இருக்கிறது.

கலவரம் காரணமாகத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்று சர்க்கார் தெரிவித்து இருப்பதைப் பொருத்தவரை விஷயம் சரிதான் என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் கலவரம் யாருக்குள் ஏற்படும் என்று சர்க்கார் வெளியில் காட்டி இருப்பது நாணயமற்ற பித்தலாட்டமான அறிக்கை என்றே சொல்லுவோம். இந்த மாகாணத்தில் இப்போது தேர்தல் நடந்தால் பொதுமக்களுக்குள் கலவரம் நடப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. முஸ்லிம்கள், கிருஸ்துவர்கள், ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களுக்கு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டு விட்டதாலும், ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்குத் தொகுதிகளும் பிரிக்கப்பட்டு விட்டதாலும், ஒதுக்கப்பட்டு இருக்கும் வகுப்புகளில் தங்களுக்குள் பெரிய கலவரங்கள் நடக்கும்படியான மாதிரிக்குப் பிரிவினையோ, கட்சிக் கலவரமோ நடக்கும்படியாகச் சிறிதும் ஜாடைகூட இல்லாமல் இருப்பதாலும் தேர்தலில் ஒதுக்கப்பட்ட வகுப்புகளால் எவ்வித கலவரமும் ஏற்பட இடமில்லை. ஒதுக்கப்பட்டு இருக்கும் ஸ்தானத்துக்கு அருகர்களானவர்கள் மற்ற பொது மக்களோடு கலவரம் உண்டாகும்படி நடந்துகொள்ளவோ, பிரச்சாரம் செய்யவோகூட சிறிதும் அவசியமில்லை என்றே சொல்லலாம். ஏனெனில் அந்த ஸ்தானங்களில் இப்போது பலமான போட்டி ஏற்படும்படியான நிலைமை இல்லை. உதாரணமாக முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட்டஸ்தானங்களுக்கு முஸ்லிம்லீக் அபேட்சகர்களைத் தவிர சும்மா பெயருக்கு வேறு அபேட்சகர்களைப் போட்டு வைக்கலாம் என்றாலும் அநேக இடங்களுக்கு ஆள்களே கிடையாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதற்கும் உதாரணம் வேண்டுமானால் காங்கரஸ் அட்டாக் கமிட்டிக்கு லீக் முஸ்லிம்களுக்குப் போட்டிப்போட தேசிய முஸ்லிமோ, சுயேட்சை முஸ்லிமோகூட அநேக ஸ்தானங்களுக்கு கிடைக்கவே இல்லை. அப்படி இருக்க தேர்தலில் இந்து முஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் ஏற்படும் என்று சொல்வதில் சிறிதுகூட நாணயமோ உண்மையோ இருக்காது.

மற்றெதற்காக ஸ்தலஸ்தாபன தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டு விட்டன என்றால், தேர்தல்கள் நடந்தால் காங்கரஸ்காரர்களுக்குள் கலவரம், கலகம், குழப்பங்கள் நடக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதே முக்கிய காரணமாகும். அட்டாக் கமிட்டியில் அதிகமான கலவரம் ஏற்பட்டுப் பல காங்கரஸ் முக்கியஸ்தர்கள் அட்டாக்கமிட்டியில் இருந்து விலகிவிட்டார்கள். டாக்டர் சுப்பராயன், தோழர்கள் மதுரை பட்டாபிராமய்யர் (மதுரை ஜில்லாபோர்ட் பிரஸிடெண்ட்டாயிருந்தவர்) திருநெல்வேலி எக்யேஸ்வர சர்மா முதலியவர்கள் அட்டாக்கமிட்டி நியாயமாய் வேலை செய்யாத

ரோஜா முத்தையா

தாலும்; வகுப்பு, கட்சி உணர்ச்சியோடு வேலை செய்வதாலும் அதிலிருப்பது தங்களுக்குத் தகுதி இல்லை என்று ராஜினாமா செய்திருக்கிறார்கள். இந்த ராஜினாமாக்கள் பத்திரிக்கைகளில் வெளியாகி இருக்கின்றன.

இதுதவிர அட்டாக்கமிட்டித் தெரிந்தெடுத்தது சரியாக இல்லை என்று மேலிடத்துக்கு ஏராளமான புகார்கள் வந்திருக்கின்றன. பல அட்டாக்கமிட்டிகளில் ஒருவருக்கொருவர் கண்டபடி வைதுகொள்ளுதல், அடிதடிகள், கமிட்டிக்கூட்டம் சரியாய் நடக்காமல் திடீரென்று கலைந்து மெம்பர்கள் போய்விடுதல் முதலியன நடந்து இருக்கின்றன. இவ்வளவு மாத்திரமல்லாமல் அட்டாக்கமிட்டியால் தெரிந்தெடுக்கப்படாத காரணத்தால் மனக்குறை கொண்ட பலர் தாங்கள் காங்கரஸ் போட்ட அபேட்சகருக்குப் போட்டியாய் நிற்கப்போவதாக முடிவுசெய்துகொண்டு, தேர்தல் வேலைசெய்துவிட்டார்கள்; சிலர் எதிர்கட்சிக்கு வேலை செய்யத் துணிந்து பணமும் ஆளும் கொடுப்பதாக வாக்களித்துவிட்டார்கள்; இன்னும் சிலர் இலஞ்சம் வாங்கிக்கொண்டு சிலரை நியமித்தார்கள் என்பனபோன்ற தகவல்களும், புகார்களும் சர்க்காருக்கு நேரிடையாகவும் எழுத்து மூலமாகவும் ஏராளமாக வந்ததால் இந்தத் தடவை ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் காங்கரஸ் பலமான தோல்வி அடையக்கூடும் என்பதோடு காங்கரஸ் வண்டவாளம் சிரிப்பாய் சிரிக்கப்பட்டுவிடும் என்று கருதி கவர்னரிடம் அழுகையாய் அழுது, மந்திரிகள் தேர்தலை ஒத்திவைத்துக்கொண்டார்கள்.

தியாகமூர்த்திகள், தேசத்துக்காகச்சிறைசென்ற தேசியவீரர்கள் ஆகியவர்களின் யோக்கியதையும் காங்கரஸ் கட்டுப்பாடு என்பதின் தன்மையுமே இந்தப்படி காங்கரஸ் சர்க்கார் இவ்வளவு யோக்கியப் பொறுப்பற்றத்தனமாய் நடந்துகொண்டதற்குக் காரணம் என்பதை நன்றாக வலியுறுத்திக் கூறுவோம் என்பதோடு இதற்கு மற்றும் பல ஆபாசமான ஆதாரங்களையும்கூட காட்டுவோம்.

ஸ்தலஸ்தாபன தேர்தல்கள் நடந்து இன்றைக்கு, 8, 9 வருடங்கள் ஆகின்றன. சமீபகாலம்வரை ஓட்டர்கள் லிஸ்ட் காங்கரசாரின் இஷ்டப்படியெல்லாம் திருத்தப்பட்டே வந்திருக்கின்றன. அந்த ஓட்டர்களின் ஓட்டின்மீது மந்திரிகள் சட்டசபை மெம்பர்களானார்களோ அந்த ஓட்டர்களேதான் அநேகமாய் இப்போதும் ஓட்டு செய்பவர்களாக இருக்கிறார்கள். 1937ம் வருடத்து, 1939ம் வருடத்து ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் எந்தெந்த சர்க்கிள் பெயரால், எந்தெந்த வார்டுகளின் பெயரால் காங்கரஸ் தோழர்கள் நின்று ஏகபோகமாய் வெற்றிபெற்றார்களோ அதே சர்க்கிளும், அதே வார்டுகளும்தான் இன்றைக்கு இருந்து வருகின்றன. இப்படி இருக்கும்போது சர்க்கிள் சரி இல்லை, வார்டு சரியில்லை என்றுகூறி இவைகளை மாற்றுவதற்கு இன்றைக்கு அவசியம் ஏற்பட்டதற்குக் காரணம் நாட்டில் காங்கரஸ்காரர்களுக்கு யோக்கியதையும் செல்வாக்கும் அற்றுப்போய் அவர்களை அனுப்பிய பழய ஓட்டர்கள் (ஆட்கள்) இப்போது மறுபடியும் அனுப்பமாட்டார்கள், ஆதலால் இதற்கு வேறு எதாவது தந்திரம் செய்யலாம் என்பதைத் தவிர வேறு அல்ல காரணம் இருக்க முடியும் என்று பந்தயம் கட்டிக் கேட்கின்றோம்.

இந்த நிலையை தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் தோழர் காமராஜநாடார் அவர்கள் உணர்ந்தே காங்கரசின் மானம் போய்விடக் கூடாது என்று கருதி "இந்தத்தேர்தலில் காங்கரசின் பெயரால் ஆட்கள் நிறுத்தக்கூடாது; அவரவர்கள் இஷ்டப்படி நிற்க அனுமதி கொடுத்துவிட வேண்டும்" என்று தலையாலடித்துக் கொண்டார். இந்த முடிவுக்குக் கட்டுப்பட்டால் சில அநாமதேயங்களும், பார்ப்பனர்களும் ஸ்தலஸ்தாபனங்களுக்கு வர முடியாதே என்று கருதி அவர் முடிவை இலட்சியம்செய்யாமல் அட்டாக்கமிட்டி போட்டு எப்படி எப்படியோ வேலை செய்து பலர் உள்ளே புகுந்துகொண்டார்கள் என்றாலும் நாட்டு நிலைமை பழயநிலைமை போல் "காங்கரஸ் பார்த்து ஒரு மிருகத்தை, களிமண் உருண்டையைப் பிடித்துவைத்தாலும் மக்கள் ஆதரித்துவிடுவார்கள். ஒரு அயோக்கியன் வந்து காங்கரஸில் சேர்ந்தாலும் அவன் மகா யோக்கியனாகிவிடுவான். சாக்கடைத் தண்ணீர் காவேரியில் வந்து சேர்ந்தால் அதுவும் காவேரி தீர்த்தமாக பாவிக்கப்படுவதுபோல் எல்லாவிதமான அயோக்கியனும் காங்கரசில் சேர்ந்தால் பரிசுத்தவானாக ஆகிவிடுவான்" என்றெல்லாம் கூறி கும்மாளமடித்த காலம் இன்று மாற்றமடைந்துவிட்டது என்பது இதிலிருந்து விளங்கிவிட்டது. இதற்குக் காரணம் காங்கரஸ்காரர்களின் கெட்ட நடத்தை என்றாலும், அல்லது மக்களுக்கு அறிவு விளக்கம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் அல்லது வேறு எப்படி இருந்தாலும் காங்கரசின்பாச்சா இனிப்பலிக்காது என்கின்ற நிலை ஏற்பட்டு வரு

கிறது என்பதற்கு இது ஒரு அறிகுறியாகும்.

காங்கரசு என்கின்ற பெயரால் அன்னக்காவடிகளும், அநாமதேயங்களும் போட்ட குதியாட்டங்களும், காட்டிய தலைக்கொழுப்பும் அறிவுள்ள பல தக்க மக்களுக்கே வெளியில் தலைகாட்ட முடியாத வெட்கமாய் இருந்தது என்றாலும் அப்படிப்பட்டவர்கள் உதவியாலேயே இந்தத்தக்க மனிதர்கள் என்பவர்கள் பதவிக்கு வரவேண்டியவர்களாகவும் தங்கள் சுயநலங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருந்ததால் சாமியாடியிடம் சாமி கேட்கப் போகிறவர்கள் "சக்கிலி மீது சாமி வந்தால் வாக்கு கேட்கிறவன் பிராமணனாக இருந்தாலும் சாமியாடியை சாமி என்றுதான் கூப்பிட்டாக வேண்டும்" என்கின்ற பழமொழிபோல் எவ்வளவு பெரிய தகுதி உடையவனும், தகுதி இல்லாதவனை மரியாதை செய்துதான் ஆகவேண்டும் என்கின்ற தன்மை இருந்து வந்தது. ஆனால் இன்று அப்படிப்பட்ட காங்கரசில் தகுதி உள்ளவர்கள் என்பவர்களுக்குள்ளாகவே போட்டி வந்துவிட்டதாலும், தகுதிக்கு அர்த்தம் மக்களுக்கு தெரிந்துவிட்டபடியாலும் காங்கரஸ் கட்டிடம் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. இதற்கு முட்டுக்கொடுக்க முயலவே காங்கரஸ் சர்க்கார் தேர்தலை ஒத்திப்போட்டுவிட்டது. இனி சர்க்கிள் பிரிப்பதிலும், வார்டு பிரிப்பதிலும், தொகுதி பிரிப்பதிலும், சர்க்கார் மற்றவைகளில் செய்வதுபோன்ற மகா அக்கிரமங்கள் செய்து ஆகவேண்டும். கலகக்காரர்களும் காலிகளும் சொல்லுகிறபடியெல்லாம் நடந்துதான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் எதிர்க்கட்சியார் இந்தக் கலகக்காரர்களிடம் படும்பாடு, காங்கரஸ் மந்திரிகள், பிரமுகர்கள் முதலியவர்களும் பட்டுத்தான் ஆகவேண்டி வரும்.

எனவே இதற்கும் பயந்துதான் இப்போது தேர்தலைக் காங்கரஸ் சர்க்கார் ஒத்திவைத்துவிட்டது. உண்மை இப்படி இருக்க தேர்தலை ஒத்திப்போட்டதற்குக் காரணம் 'நாட்டில் தோன்றி இருக்கும் வகுப்புக்கலவரம்'' என்று சொல்லுவது பித்தலாட்டமான காரணம் என்று சொன்னோம்.

இப்போது கலைக்கப்பட்ட ஜில்லாபோர்டுகள் இனியும் ஒரு வருஷகாலத்திற்குச் சர்க்கார் அதிகாரிகள் ஆதிக்கத்தில் நடக்குமா அல்லது காங்கரஸ்காரர்களுக்குள் நியமனம்செய்து நியமன போர்டாக நடக்குமா என்பது தெரிவிக்கப்படவில்லை. நியமனபோர்டாக ஆக்கப்பட்டாலும் முன்னை இருந்த அங்கத்தினர்களையே அதாவது அட்வைசர்காரரால் கலைக்கப்பட்டு நாமினேஷன் செய்யப்பட்ட போர்டுகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று சிலர் வாதாடினாலும் எலக்‌ஷன் போர்டாக இருந்தபொழுதிலாவது பழைய அங்கத்தினர்களையும், பழைய பிரசிடெண்டுகளையும் நியமிப்பார்களா அல்லது ராஜாஜி—காமராஜர் என்கின்ற கட்சி பார்த்து அல்லது விலைக்கு விற்று நியமிப்பார்களா என்பது தெரியவில்லை.

ஜில்லாபோர்டு நிலை இவ்வளவு சந்தேகத்திற்கு இடங்கொடுக்கின்றது என்றால் முனிசிபாலிட்டிகளை என்ன செய்வார்கள் என்பதும் தெரியவில்லை. ஏனெனில் முனிசிபாலிட்டிகள் கலைக்கப்படவில்லை. இப்போதுள்ள முனிசிபாலிட்டிகள் ஜில்லாபோர்டுகளைவிட அதிக நாள் ஆன பூசணம் பிடித்துப்போன முனி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாகச் சொன்னால், ஒருவருக்கொருவர் உதவி செய்கிற உணர்ச்சியோ, நயமாக நடந்துகொள்ளுவதோ, நம்மைப்போல் தானே அந்நியன் என்கின்ற எண்ணமோ, மற்றொருவனை சங்கடப்படுத்தக்கூடாது, ஏமாற்றமடையச் செய்யக்கூடாது என்கின்ற கவலையோ, மற்றவர்கள் சௌகரியத்தைப் பற்றி யோசிப்பதோ நம்மில் மிக அருமையாகவே இருக்கும்.

பொதுவாகப் பேசுமிடத்து நாகரிகம் என்பதெல்லாம் ஒரு மனிதனிடம் ஒரு மனிதன் நடந்துகொள்ளும் விதத்திலேயே பெரிதும் அடங்கியிருக்கும். அதை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் நம் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் ஏராளமான வித்தியாசம் இருந்து வருகிறது.

இதைக் கற்றுக்கொள்ளவோ, கற்றுக்கொடுக்கவோ நமக்கு வசதி இல்லாமல் இருந்து வருகிறது.

## திராவிடர் கழகம்!

6-10-46ல் கூலிபுரத்தில் திராவிடர் கழகம் கிளையின் நிலைவாசக் குடியரசு வளர்ச்சிக்கு மூன்று ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

---

சிபாலிட்டிகளாகும் என்பதோடு, ஜில்லாபோர்டைக் கலைத்துவிட்டு முனிசிபாலிட்டியை வைத்து இருப்பது ஓரவஞ்சனை என்று பலர் மனவேதனை, வயிற்றெறிச்சல் படக்கூடும். ஆகவே அதையும் என்னசெய்வது என்பது மந்திரிகளுக்கு ஒரு தக்கப் பிரச்சினையாய் இருக்கிறது.

பொதுவில் நம்நாட்டு சுயராஜ்யம் அதுவும் அடியோடு 'நம்'' மக்கள் கையில் ஒப்படைத்துவிட்டதாகச் சொல்லப்படும் இந்தக் காலத்தில் இந்தச் சிறிய இலாக்கா இந்தகதி அடைவது என்றால் இன்றைய சுயராஜ்யம் என்றால் என்ன என்பது விளங்க ஒரு நல்ல எடுத்துக் காட்டு ஆகும்.

# மேல்நாடும் கீழ்நாடும்

## பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

இரண்டுபேர் ஏதோ தனித்த விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும், அதில் போய் கலந்துகொள்வார்கள்; அல்லது அங்கு உட்கார்ந்து தங்கள் காரியமும் நடக்காமல், அவர்கள் பேச்சும் நடக்கவொட்டாமல் மூன்றுபேருமாய் பேசாமல் உட்கார்ந்திருப்பார்கள்; அல்லது அநாவசியமாய்க் கலந்துகொண்டு, சங்கடத்தை உண்டுபண்ணுவார்கள். எதிரி சொல்லுவதைக் கேட்காமல் தாங்களே பேசிக்கொண்டு இருப்பார்கள். ஒருவரை ஒருவர் கேட்டால், மற்றொருவர் பதில் சொல்லி தன் பக்கம் இழுத்துக் கொள்வார். இரண்டுபேர் பேசிக்கொண்டு இருக்கும்போது அவர்களுக்குத் தொந்திரவு உண்டாகும்படியும், அவர்கள் பேசுவது ஒருவருக்கொருவர் காது கேட்காதபடியும் வேறு இரண்டுபேர் உரக்கப்பேசி கஷ்டம் கொடுப்பார்கள். பேசுவதில் ஒழுங்குமுறை அனுசரிக்கிற வழக்கம் இங்கு மிக மிக அருமை. முன்னால் சென்றவர், பின்னால் சென்றவர் என்கின்ற வரிசை ஒழுங்கைக் கவனிக்காமல், ஒருவன் ஒரு இடத்துக்கு முன்னதாகவே சென்று காத்திருப்பவனாய் இருந்தாலும், அதை இலட்சியம் செய்யாமல் அவனுக்கு முன்னால் போய் நின்றுகொண்டு, தங்கள் காரியத்தை முதலில் செய்துகொள்ளப் பார்ப்பார்கள். இரயில், கார், பஸ் முதலிய பிரயாண இடங்களில், முன்னால் வந்தவன் பின்னால் வந்தவன், என்கின்ற முறை இல்லாமல், பின்னால் வந்தவன் முன்னால் வந்தவனைத் தள்ளிவிட்டு முன்போய் விடுவான். டிராம் கார், பஸ் முதலியவற்றின் ஸ்டாண்டில் வெகுநேரம் காத்திருப்பவனை இலட்சியம் செய்யாமல், பின்னால் ஓடிவந்தவன் தள்ளிவிட்டு ஏறிக்கொண்டு, முன் வந்தவனுக்கு இடமில்லாமல் செய்துவிடுவான். இரயில்வே டிக்கட் வாங்குகிற இடத்தில் உள்ள டிக்கட் கொடுக்கும் துவாரத்தில் 2பேர் 3பேர் கையை விட்டுக்கொண்டு எடுக்கமாட்டாமல் தொந்திரவுபடுவார்கள். இரயில் வண்டியில் 2பேர், 3பேர், 4பேர் உட்காரும் இடத்தை ஒருவன் எடுத்துக்கொண்டு, மற்றவன் இடமில்லாமல் நிற்பதைப் பார்த்துக்கொண்டே அவனை நிற்க வைப்பான். குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் என்கின்ற கவலை இல்லாமல் தாராளமாய்த் தாங்களே அதிக இடத்தையும், அதிக சௌகரியத்தையும் அனுபவிப்பார்கள். மக்கள் உட்கார இடமில்லாதபோது, சாமான்களை இருக்கைகளின் மீதும் பரப்பி வைத்துக்கொள்வார்கள். மற்றொரு அந்நியன் வண்டியில் ஏறும்போது, உட்கார்ந்திருப்பவன் சட்டென்று நீட்டிப்படுத்துக்கொண்டு தூங்குகிறவன்போல் கண்ணை மூடி, குறட்டைவிட ஆரம்பிப்பான்.

உட்கார்ந்திருக்கும் வண்டியில் காரி உமிழ்வதும்; குழந்தைகளை மலஜலம் கழிக்கவிடுவதும், குப்பை செத்தைகள் ஆக்குவதும், தண்ணீர் கொட்டி ஆபாசமாக்குவதும் நம்மவர்களால் வெகு சகஜமாகச் செய்யப்படும். நாடகம், வேடிக்கை பார்க்குமிடம், பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் முதலியவைகளில், பின்னால் இருப்பவர்களுடைய சௌகரியத்தை அனுசரிக்காமல், தலை தூக்கி மறைப்பது, நின்றுகொண்டு மறைப்பது, பேசிக்கொண்டு தொந்திரவு செய்வது ஆகியவைகள் சாதாரணமாக நிகழும்.

ஏதாவது சாமான் விநியோகிக்கும் போதும், காகித நோட்டீஸ் முதலியவை விநியோகிக்கும்போதும், கும்பலாக எழுந்து கொள்வதும், எனக்கு உனக்கு என்று சப்தமும், கலாட்டாவும் செய்வதும், 10, 20 கைகள் நீட்டப்படுவதும், கொடுப்பவனுக்கும் சபைக்கும் தொல்லை உண்டாகும்படி செய்வதும், விநியோகிக்கப்படும் சாமான் கீழே கொட்டப்படும்படியும் நழுவி விழும்படி செய்வதும், 100க்கு 75 விநியோகங்களில் பார்க்கலாம்.

வருவதாகச் சொன்ன காலத்தில் வரமாட்டார்கள்; காத்திருக்கச்செய்து ஏமாற்றமடையும்படி செய்வதைப் பற்றியும் கவலைப்பட மாட்டார்கள்.

கூலிகள், வாடகை வண்டிகள் அமர்த்தப்படும் இடங்களுக்கு ஒரு மனிதன் போனால், அவனைச் சூழ்ந்துகொண்டு, பிய்த்துப் பிடுங்கி விடுவார்கள்; சாமான்களைப் பிடுங்குவார்கள்; கண்டபடி கூலி வாடகை விகிதம் கேட்பார்கள்; போட்டிப் போட்டு வாடகையை மிகக்குறைத்து சொல்வார்கள்; கூலி, வாடகை பெறும்போது கலகம், அதிருப்தி, ஏகதேசமாய்ப் பேச்சு இல்லாமல் இருக்கவே முடியாது. கடைகளில் சாமான்களில் சாமான் தெரிந்தெடுத்து வாங்கும் நேரத்தைவிட விலைகளைப் பற்றி வியாபாரம் பேசும் நேரமே அதிக நேரமாக இருக்கும். விலைகளில் ஒரு ஒழுங்கில்லாமல், "ஏமாற்றிய வரையில் இலாபம்" என்றே வியாபாரிகள் கருதுவார்கள்.

ஒருவனுக்கு ஒருவன் உதவி செய்வது என்பது மிக அருமையாக இருக்கும். மக்களிடம்—மக்கள் அதிகாரமாகவே பேசி பெருமை கொள்ளப் பார்ப்பார்களே ஒழிய, தன்மையாகவோ நயமாகவோ பேசவே மாட்டார்கள். அப்படி நயமாகப் பேசுவதைக் கௌரவக் குறைவாக நினைப்பார்கள். ஒருவனுக்கு-அவன் போகுமிடத்துக்கு வழி காட்டுவதோ, கேட்ட விபரங்களுக்குப் பதில் சொல்லுவதோ, பிறர் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனை விசாரித்து உதவி செய்வதோ இங்கு சிறிதுகூட நாகரிகமாய்க் கருதப்படுவதில்லை; அலட்சியப்படுத்துவதுதான் நாகரிகமும், கௌரவமுமாகக் கருதப்படுகிறது.

ஒரு மனிதனிடம் மற்றொரு மனிதன் இதை கேட்டால் வருத்தப்படுவானே, தாட்சண்யத்தால் சங்கடப்படுவானே என்கின்ற யோசனையில்லாமல் தன் காரியத்தையே பிரதானமாகக் கருதி மற்றவர்களின் சமய சந்தர்ப்பத்தைக் கவனிக்காமல், கண்ட விஷயங்களைக் கேட்டுச் சங்கடப்படுத்துவது, பல விஷயங்களில் அந்நியனை ஏமாற்றமும் அதிருப்தியும் அடையும்படி செய்வது இங்கு மிக சகஜமாக நடக்கும்.

பெண்களை நயமாக நடத்தாமல் முரட்டுத்தனமாக நடத்துவார்கள். பேசுகையில், மரியாதைப் பதங்களை உபயோகிப்பதில்லை.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

(2-ம் பக்கத் தொடர்ச்சி).

யுணர்ந்து அதற்குரிய அரசியல் பாதுகாப்புகளை அறவே வொழித்துவிட்டிருக்கிறது. கடவுள் நம்பிக்கை எல்லா மூட நம்பிக்கைகளைவிட மாபெரும் மூடநம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை நமது நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமானால், சமதர்மிகள் அரசியல் ஆதிக்கம் பெறவேண்டும்.

அவனவன் ஜாதி அவனவனுக்கு உரியதெனும் பாதுகாப்பையும் உடைத்தெறிய வேண்டும். ஜாதிச் சண்டைகளில் நாங்கள் தலையிடமாட்டோமென்று பாசாங்குச் செய்யும் அரசின் மனப்பான்மையைத் திருத்தவும் வேண்டும். (Neutrality in religions and caste matters). ஜாதி மத நடுநிலைமை என்பதெல்லாம் ஒரு ராஜதந்திரமென அறிக. "எவன் எப்படி கெட்டாலும் என் [illegible] நிலைத்திருக்கத் தால் போதும்" [illegible] தந்திர மனப்பான்மைக்கு, [illegible] அடையாளம். ஜாதியும், மதமும், சமதர்மிகளுக்கு, Anathema, அதாவது, விலக்கவேண்டியவைகளாதலால், அரசியல் ஆதிக்கத்தைப் பெற்றாலொழிய, இதனை ஒழிக்க முடியாது. (Public life) பொதுவாழ்க்கையிலிருந்தும், பொது ரிகார்டுகளிலிருந்தும் (Public Records) ஜாதிப் பெயர்களை நீக்காதவரை, ஜாதி நாட்டைவிட்டு அகலுமென்பது வீண் எண்ணமே. இதனை நீக்க, சமதர்மிகள் அரசியல் துறையில் நுழையவேண்டும்.

### பெண்கள் சுதந்திரம் பெறும்வழி

பெண்கள் சுதந்திரம் பெறுவதற்கும், அரசியல் மூலமாகச் சட்டதிட்டங்கள் செய்தாக வேண்டும். அல்லாக்கால் புராணக் கொடும் பழக்க வொழுக்கங்களில் ஆழ்ந்து கிடக்கும் நமது நாட்டு மக்கள், நமது தேசத்தில், தங்களுக்குச் சமத்துவமாக பெண்களைச் சுதந்திரத்துடன் நடத்த மாட்டார்கள்: பெண்களை, அடிமைகளைப்போலவே நடத்த வேண்டுமென்ற மனப்பான்மை ஆண்டாண்டுகளாக நமது நாட்டு மக்களிடையே குடிகொண்டு வந்திருக்கிறது. அந்த மனப்பான்மை, வெறும் சொற்களாலும், வேண்டுகோளாலும், சாத்திர மேற்கோள்களாலும் நீங்காது. விதவைகள் மறுமணம் புரிந்துகொள்ளலாமென்று, அநேக ஆண்டுகளாக பிரசங்கங்கள் செய்து வந்தும், இதன் விஷயமாக, அரசியல் வெளியிலிருந்து ராஜாராம் மோகன்ராய், கேஷப் சந்திர சென், பந்தார்கர், வீரேசலிங்கம் பந்தலு முதலிய பெரியோர் பாடுபட்டு உழைத்து வந்தும், விதவைகள் மறுமணத்தைத் தேசம் அங்கீகரிக்கவில்லை. ஆனால், சட்டமூலமாக இரண்டொருவரியால் விதவைகள் மறுமணம் புரிந்துகொள்ளலாம், அதனால் தங்கள் உரிமைகள் யாதொன்றும் போகாதென வரைந்த மாத்திரத்தில், விதவை மறுமணம் சட்டவரம்பிற்குட்பட்டதாயிற்று. இதுபோலவே ஜாதியை விட்டவர்களுடைய உரிமைகளும் ராஜீய திட்டத்தினால் பாதுகாக்கப்பட்டன. ஆதலினால் இனி சாதி, சமயங்களின் கொடுமைகளை நீக்க வேண்டுமானால், அரசியல் துறையில்தான் இறங்கவேண்டும்.

### மூடநம்பிக்கைகள் ஒழியும் வழி

மதங்களை ஒழிக்கவும், ஜாதியை நாட்டைவிட்டோட்டவும், பெண்மக்கள் ஆணுடன் சகல சமத்துவம் பெறச் செய்யவும் அரசியல் ஆதரவு வேண்டுமென்ற அவசியத்தைக் குறிப்பிட்டோம். பில்லி, சூன்யம், (Witchcraft and Sorecery) சோதிடம், குறிச்சொல்லுதல், பிரார்த்தனை, பலி, மந்திரம், தந்திர முதலிய மூட நம்பிக்கைகளினின்று மக்களை விடுவிக்க வேண்டுமானாலும் அரசுபுரிவோர்களால்தான் செய்யமுடியும். இம் மூடநம்பிக்கைகளால் கோடிக்கணக்கான பாமரமக்கள் மந்திரக்காரர், தந்திரக்காரர் முதலியவர்கள் செய்யும் மோசத்திற்குட்பட்டு, மெஞ்ஞான சிகிச்சைசெய்து கொள்ளாமலே வருஷா வருஷம் இலட்சக்கணக்காக வீணே மடிகின்றனர். இவ்வித மரணத்தால் நாட்டிற்கு உண்டாகும் பொருளாதார நஷ்டம் கோடிக்கணக்கில் என்று சொல்ல வேண்டும். இந்த மூடநம்பிக்கைகளிலிருந்து மூட மக்களை மீட்பது சமதர்மிகள் கடமையாகும். இந்தக் கடமையைச் செலுத்த வேண்டுமானாலும், அரசாங்கத்தால்தான் முடியும்.

இதுவரை, சமூக ஊழல்களாகிய மதம், ஜாதி, மூடநம்பிக்கை, பெண்களின் கஷ்டம் நிலைக்கச் செய்துவரும் பாதுகாப்புகள் முதலியவைகளைக் களையவேண்டிய மார்க்கத்தைச் சுருங்க எடுத்துக் காட்டினோம். இனி சமதர்மத்திற்கே நேர் விரோதமாயுள்ள பாதுகாப்பினை எடுத்துரைத்து, அதனை நீக்கும் மார்க்கங்களையும் சுருங்க எடுத்துரைப்பாம்,

(தொடரும்)

### நீத்தார் நினைவுநாள்

வாழ்குடை தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் தாயாரின் நினைவுநாள் கொண்டாடியதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.

ரோஜா முத்தையா